# நெஞ்சிற்கினிய “சுதந்திரத் திருநாளில்” நினைவுகூர வேண்டிய தலைவர் “கலைஞர்”



இந்திய சுதந்திரம் என்றாலே போதும்...
இதயத்தில் மகிழ்ச்சி அலைகள் மோதும்...
சிந்திய ரத்தம் கொஞ்ச நஞ்சமல்ல...
சிறைச்சாலைக் கொடுமை ஒன்றி ரண்டல்ல...

காந்தி... ஜவகர்... பாரதி... வ.உ.சி...
காமராஜர் கக்கன் திருப்பூர் குமரரென
ஏந்திய சுதந்திர வேள்வித் தீயில்
நீந்தியே உயிர்நீத்த தியாகச் செம்மல்கள்...

அவர்களைப் போற்றுகிற பொன்நாளாம் இந்நாளில்
அருமைமிகு கலைஞரையும் நினைத்துப் பார்க்கின்றேன்...
குவலயமே போற்றிக் கொண்டாடும் வகையிலே – உரிமை
கொண்டுவந்து கொடுத்திட்டார் கலைஞர் நம் கைகளிலே...

குடியரசுத் திருநாளில் ஆளுநர் வருகை தந்து
கொடியேற்றல் போலே... மாநில முதல்வர்களும்
கொடியேற்ற வேண்டும்... சுதந்திரத் திருநாளில்... என
கோரிக்கை வைத்துச் சாதித்தார் “கலைஞர்”

நல்லவேளை அப்போது “இந்திரா” பிரதமர்
நாற்காலியில் இருந்ததால் சாத்திய மாயிற்று...
உள்ளமெலாம் மகிழுகின்ற கலைஞரின் கோரிக்கை
உவகையுடன் வெற்றி பெற்று சாதனை யாயிற்று...

இந்தியத் திருநாட்டின் மாநில முதல்வர்களே – இதனை
என்றென்றும் நன்றியுடன் நெஞ்சிலே நிறுத்துங்கள்... ! மக்கள்
சிந்தனைக்குத் தருகின்ற சிறுதுளி சேதி இது – இதுபோல்
சிறப்பான சாதனைகள் கலைஞரிடம் ஏராளம்!



கவிஞர்
**இரவி பாரதி**

## ரஷியாவில் வெள்ளம்!

மாஸ்கோ, ஆக.15 -

ரஷியாவின் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷியாவின் கிழக்குப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் கனூரன் புயல் ஜப்பானுக்கு கனமழையை கொடுத்தது. பின்னர், அந்த புயல் கொரிய தீபகற்பம் நோக்கி நகர்ந்தது. ரஷியாவின் கிழக்கு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் 405 குழந்தைகள் உள்பட 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.



திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அரசு பல்நோக்கு மருத்துவமனையில், நான்குநேரி பகுதியில் சக மாணவர்களால் பாதிக்கப்பட்டு, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அண்ணன், தங்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் முன்னிலையில், நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள்.

### “நீட்” தேர்வு குறித்த ஆளுநரின் கருத்தை கடுமையாக எதிர்க்கிறேன்!

### தங்களது வேதனை, குமுறலை பெற்றோர்கள் ஆளுநர் மாளிகையில் வெளிப்படுத்தியதில் இருந்தாவது

# தமிழ்நாடு ஆளுநர் ‘நீட்’ தேர்வு குறித்து தெளிவு பெற வேண்டும்!

### தென்காசியில் – மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

**தென்காசி, ஆக.15-**

**நீட் தேர்வு விலக்கு குறித்து ஆளுநரின் கருத்தினைக் கண்டித்து தென்காசியில் பேட்டியளித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், “ஆளுநர் மாளிகையில் மாணவர்கள் வெளிப்படுத்திய வேதனை, குமுறல் கண்டாவது தமிழ்நாடு ஆளுநர், ‘நீட்’ தேர்வு குறித்து தெளிவு பெற வேண்டும்” என்றும் ‘நீட்’ தேர்வு குறித்த ஆளுநரின் கருத்துக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டார்.**

அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தேர்தல் அறிக்கையில் பிரதிபலித்தது மட்டும் அல்லாமல் ஆட்சியில் வந்தவுடன் நீதியரசர் ராஜன் தலைமையில் குழு அமைத்து அதிலிருந்து தீர்ப்பை பெற்று அதை சட்டமன்றத்தில் மசோதாவாக வைத்து அனைத்து கட்சிகளின் ஒப்புதலை பெற்று ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதே ஆளுநர் அவர்கள் இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்து மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதனை செய்யாமல் காலம் கடத்தினார். மீண்டும் ஒரு மசோதாவினை சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆளுநர் அவர்கள் வேறு வழியே இல்லாமல் இந்த மசோதாவினை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

தற்போது மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் உள்துறைக்கு அனுப்பி வைத்தார். உள்துறை அமைச்சகம் தமிழ்நாட்டில் 3 துறைகளுக்கு அதாவது ஆயுஷ் துறை, கல்வித் துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளுக்கு தொடர்ந்து இரண்டு, மூன்று முறை Clarification என்கின்ற வகையில் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்ட வல்லுநர்களுடன் தொடர்ந்து பேசி அவர்கள் ஒவ்வொரு முறையும் கேட்கும் Clarification களுக்கு சரியான பதிலை சட்ட ரீதியாக எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறோம். கடந்த மாதம் கூட Clarification வந்தது. பதில் அனுப்பி இருக்கிறோம். நீட் தேர்விலிருந்து விலக்கு பெற வேண்டும் என்பது கூட இப்போது வரை உயிரோட்டமாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நேற்று ஆளுநர் அவர்கள் ஆளுநர் மாளிகையில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர், மாணவியரோடு கலந்து பேசுகின்ற நிகழ்வில் நீட் தேர்வு விலக்கிற்கு நான் கையெழுத்து போட மாட்டேன் என்று சொல்கிறார். முதலில் கவர்னர் அவர்கள் இதிலிருந்து ஒரு விளக்கம் பெற வேண்டும். இனிமேல் நீட் தேர்வு விலக்கிற்கும், கவர்னருக்கும் சம்மந்தம் இல்லை. கவர்னருக்கான ஒரே பணி என்பது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பது மட்டும்தான்.



அவர் அனுப்பி வைக்க மறுத்தால் இரண்டாவது முறை மசோதா நிறைவேற்றி அனுப்பப்பட்டது. வேறு வழி இல்லாமல் கவர்னர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து விட்டார். இதோடு அவர் பணி முடிந்து விட்டது, நீட்டிற்கும், கவர்னருக்கும் தொடர்பில்லை, அவருடைய ஒப்புதல் என்பது இனி அவசியமும் இல்லை,

இந்த நிலையில் நான் நீட் தேர்வு விலக்கிற்கு கையெடுத்து போட மாட்டேன் என்று சொல்வது இன்னும் மக்களை ஏமாற்றுவதற்கு ஒன்று, இனி நீட் தேர்விற்கான விலக்கு என்பது குடியரசுத் தலைவர் அவர்களால் Clarification திருப்தி படுத்தப்பட்டு உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவர் அவர் களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தகவலினை ஆளுநருக்கு தகவல் மட்டுமே தெரிவிப்பார்கள். அனுமதிக்காக அனுப்ப மாட்டார்கள்.

கவர்னருக்கு குடியரசுத் தலைவர் நீட் தேர்வு விலக்கு ஒப்புதல் தந்தால் இந்த ஒப்புதல் கடிதம் கவர்னருக்கு தகவலாக மட்டுமே அனுப்பப்படுமே தவிர அவர்களிடத்தில் ஒப்புதலுக்கு அனுப்ப படாது, எனவே இனிமேல் எந்த வகையிலும் கவர்னருக்கும் நீட் தேர்வு விலக்கிற்கும் தொடர்பில்லை. இந்த நிலையில் மீண்டும் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப் போல கவர்னர் அவர்களின் இந்த கருத்து என்பது அபத்தமான ஒன்று, இன்னொன்று ஒரு கவர்னருடைய செயல் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும், ஒட்டுமொத்த தமிழர்களின் எண்ணம் நீட் விலக்கு என்பது. கவர்னர் என்பவர் ஆட்சியின் பிரதிபலிப்புகளை ஓர் ஆட்சியின் நல்லதுகளை, இந்த ஆட்சி மக்களுக்கு செய்கின்ற திட்டங்களை அவர் அதனோடு இணைந்து பயனிப்பது தான் ஆளுநர் அவர்களுக்கு கடமையாக இருக்கும், அதற்கு நேர் மாறாக மக்களுக்கு எதிரான மக்களுடைய கொள்கைக்கு எதிரான நேற்று அவர் பேசிக் கொண்டு இருக்கும் போது அம்மாசியப்பன், இராமசாமி என்கின்றவர்கள் சேலம் உருக் காலையில் பணி செய்து கொண்டிருக்கின்றனர்.

அவருடைய குழந்தை 623 மதிப்பெண்கள் பெற்றிருந்த நிலையில் தரவரிசையில் 808-வது இடத்தை பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழ நந்தைக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இடம் கிடைத்து இருக்கிறது, அந்தக் குழந்தையின் தந்தை ஆளுநர் பேசிக் கொண்டிருக்கும் போது சொல்லுகிறார்.

நான் என்னுடைய குழந்தை நன்றாக படித்துக் கொண்டிருந்தது, தரவரிசை பட்டியலில் இந்திய அளவில் 808 வது இடம் பிடித்து இருக்கிறது, நல்ல கல்லூரியில் எனது குழந்தைக்கு இடம் கிடைத்திருக்கிறது, நல்ல கல்லூரியில் சேர்த்து இருக்கிறேன், ஆனாலும் நீட் தேர்விற்கு எதிராக பேசுகிறேன், நான் விரக்தியில் பேசவில்லை, நீட் தேர்வில் வெற்றி பெற்றதற்கு பிறகு பேசுகிறேன், நீட் தேர்வில் என்னுடைய குழந்தை வெற்றி பெற்றது, நீட் தேர்வினால் தமிழகத்தில் 15 குழந்தைகள் இறந்து போயிருக்கின்றனர், என்னுடைய குழந்தையும் கூட இந்த நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்கு, கடுமையாக உழைத்தது, 20 மணி நேரம், 18 மணி நேரம் படித்தது, அதற்கான நான் ரூ. 20 இலட்சம் வரை டியூசன் என்கின்ற வகையில் செலவு செய்திருக்கிறேன்.

இதனால் இது போன்று செலவு செய்து, எனது குழந்தையும் கஷ்டப்பட்டு படித்த பிறகுதான் நீட் தேர்வில் வெற்றி பெற்றார், இது போன்று பொருளாதாரம் எல்லாப் பெற்றோர்களுக்கும் இருக்கும் என்பது கடினம், எனவே இந்த கவர்னரின் கூற்றை நான் எதிர்க்கிறேன், மறுக்கிறேன் என்று யாரை அழைத்து பாராட்டு விழா நடத்தினாரோ அந்தக் குழந்தையின் பெற்றோரே சொல்லியிருக்கிறார்கள், இதிலிருந்தாவது கவர்னர் தெளிவு பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## எப்போதும் இல்லாத அளவிற்கு

# தமிழ்நாடெங்கும் திருக்கோவில் குடமுழுக்கு!

### முதல்வருக்கு பூசாரி சங்கத் தலைவர் புகழாரம்!

சேலம், ஆக. 15 -

தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருக்கோவில் குடமுழுக்கு வைபவங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன என்று கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பி.வாசு பூசாரி மேலும் கூறியதாவது:

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து பிறகு ஆண்டுக்கு 2500 திருக்கோவில்களுக்கு தலா ரூ.2 லட்சம் திருப்பணி நிதி இந்து சமய அறநிலையத் துறை மூலம் வழங்கப்பட்டு அந்த திருக்கோவில்கள் அனைத்திலும் திருப்பணிகள் நடைபெறுகின்றன.

பல்லாண்டுகளாக குடமுழுக்கு நடைபெறாமல் இருந்த பல திருக்கோவில்களுக்கு அசுர வேகத்தில் குடமுழுக்கு வைபவங்கள் நடைபெற்று வருகின்றன. குடமுழுக்கு நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்து சமய அறநிலையத் துறை தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் அனுமதி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆன்மீக அரசாட்சியில் திருக்கோவில்கள் அனைத்தும் புத்துயிர் பெற்று வருகின்றன என்று பி.வாசு பூசாரி குறிப்பிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.சேகர்பாபு அவர்களை சென்னையில் அவரது இல்லத்தில் நேற்று (திங்கள்கிழமை -14.8.2023) சங்கத் தலைவர் பி.வாசு சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அப்போது மாநிலப் பொருளாளர் கே.சுந்தரம், சங்க மாத இதழ் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.

### தென்காசி மாவட்டத்தில்

# ரூ.3.70 கோடி மதிப்பில் மருத்துவமனை கட்டிடங்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்! தனுஷ் எம்.குமார் – ஈ.ராஜா – பழனி முன்னிலை!

தென்காசி.ஆக.15-

தென்காசி மாவட்டத்தில் ரூபாய் 3.70 கோடி மதிப்பில் மருத்துவமனை கட்டிடங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., பழனி நாடார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் பாவூர்சத்திரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கருப்பானூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பெரிய பிள்ளைவலசை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தர நிர்ணய திட்ட விருதையும், அதனைத் தொடர்ந்து பயனாளிகளுக்கு தாய் சேய் நலப் பெட்டிகள் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் 10 பெட்டகங்கள்,தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தை தொழுநோய் பயனாளிகளுக்கு எம்.சி.ஆர்.காலனிகள் மற்றும் இதர உதவி பொருட்கள், மகப்பேறு சஞ்சீவி சித்த மருத்துப் பெட்டகங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது.

தமிழகத்தில் 6 மாவட்டங்கள் இன்னும் மருத்துவக் கல்லூரிக்கு ஒன்றிய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. விரைவில் ஒப்புதல் வழங்கியவுடன் முதலில் தென்காசி மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூபாய் 60 லட்சம் மதிப்பில் கண் அறுவை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு பிரிவு மற்றும் ரூபாய் 15 லட்சம் மதிப்பில் ஹோமியோபதி பிரிவு கட்டிடம்,ரூபாய் 50 லட்சம் மதிப்பில் நெட்டூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம்,ரூபாய் 50 லட்சம் மதிப்பில் கரிவலம் வந்தநல்லூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம்,ரூபாய் 60 லட்சம் மதிப்பில் மடத்துப் பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டிடம்,ரூபாய் 75 லட்சம் மதிப்பில் மேலகடையநல்லூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் மேலப்பூரிலும்,ரூபாய் 30 லட்சம் மதிப்பில் பொட்டல்புதூரிலும் ஆக மொத்தம் ரூபாய் 3.70 கோடி செலவில் 8 கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அரசு மருத்துவமனை தரத்தை உறுதி செய்வதற்கு அதற்கான வழிகாட்டுதலை வழங்குவதற்காகவும் தேசிய தர உறுதி நிர்ணயத் திட்டம் என்று 2013-2014ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருக்கிறது.(*National Quality Assurance Standards*) என்கிற வகையில் NQAS என்று சொல்லப்படுகின்ற சான்றிதழ்கள் இந்திய அளவில் சிறப்பாக செயல்படுகின்ற சிறந்த தரத்தோடு இருக்கின்ற முழு கட்டமைப்போடு இருக்கின்ற மருத்துவமனைகளை தேர்ந்தெடுத்து இந்த சான்றிதழ் வழங்கும் பணி 2013-2014ல் தொடங்கப்பட்டிருக்கிறது. இதுவரை தொடங்கப்பட்ட நாளில் இருந்து கடந்த 10 ஆண்டுகளாக இன்று வரை பெறப்பட்டிருக்கும் ஒட்டு மொத்த சான்றுகளின் எண்ணிக்கை 478, கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலால் இந்த துறையை சேர்ந்த அலுவலர்கள் மருத்துவ கட்டமைப்பு மேம்படுத்து வதற்கு அயராது பாடுபட்டதன் விளைவாக கடந்த ஒராண்டில் மட்டும் 239 தரச் சான்றிதழ்கள் NQAS என்று சொல்லப்படும் தரச் சான்றிதழ் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக பெறப்பட்ட ஒட்டுமொத்த சான்றிதழ் எண்ணிக்கை 478, கடந்த ஆண்டு மட்டுமே பெறப்பட்ட சான்றிதழ் எண்ணிக்கை 239.அதாவது 50 சதவீதம் சான்றிதழை ஒராண்டில் பெற்றிருக்கிறோம்.மீதம் இருக்கும் 50 சதவீதம் சான்றிதழ்கள் கடந்த 9 ஆண்டுகளில் பெற்றிருக்கிறது.

மகப்பேறு மருத்துவ பிரிவை பொறுத்தவரை தென்காசி மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது மாதந்தோறும் 200 மகப்பேறு நடைபெறுகிறது கண் அறுவை சிகிச்சைக்காக 100 முதல் 200 பேர் வருகை தருகின்றனர்.இவையெல்லாம் தமிழகம் மருத்துவத் துறையில் எவ்வளவு மேம்பட்ட உயர்ந்த கட்டமைப்பில் உள்ளதை காட்டுகிறது.

தென்காசி அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூபாய் 22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 36 மருத்துவக் கல்லூரிகள் உள்ளது.முத்தமிழ் அறிஞர் கலைஞரைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதில் அதிகமாக ஆர்வம் எடுத்து வருகிறார்கள். தென்காசி,திருப்பத்தூர், ராணிப்பேட்டை, பெரம்பலூர்,காஞ்சிபுரம் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களுக்கு மருத்துவ கல்லூரி வேண்டும். என்று ஒன்றிய அரசிடம்,ஒன்றிய அமைச்சரிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.இவற்றில் ஒரு மருத்துவ கல்லூரி அனுமதி தந்தாலும் கூட அதனை தென்காசிக்கு வழங்கப்படும். தென்காசிக்கு 16ஏக்கர் நிலமும் தனியார் ஒருவர் நன்கொடை யாக வழங்கி இருக்கிறார். பெரம்பலூரிலும் ஒரு இடம் உள்ளது.

விரைவில் ஒன்றிய அரசு அனுமதி தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா(தென்காசி)திவ்யா மணிகண்டன்(ஆலங்குளம்) காவேரி சீனித்துரை (கீழப்பாவூர்)லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,

மருத்துவப் பணி இணை இயக்குனர் மருத்துவர் பிரேமலதா,சுகாதாரப் பணி துணை இயக்குனர் முரளி சங்கர், சித்த மருத்துவ அலுவலர் உஷா,நெட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி, உள்பட மருத்துவர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்ட தொண்டர் அணி புதிய நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர் கம்பம் சாதிக் தலைமையில் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றனர்

### காணொலி காட்சி வாயிலாக தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு

தி.மு.க. பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (15.8.2023 – செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில், கழக பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில், இணைச் செயலாளர் அ. வெற்றிஅழகன் மற்றும் துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம், எம்.பி. வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார் ஆகியோர் முன்னிலையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்திற்கான காணொலி காட்சிக்கான தொடர்பு (Link) தங்கள் அலைபேசி எண்ணுக்கு அனுப்பப்படும்.

பொருள்: 1. தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி,

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி

“கல்லூரிகளில் நடத்தப்படும் நிகழ்வுகளான கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் “தமிழகம் முழுவதும் நடத்துவது – குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 14.8.2023

**கு.கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி